**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 460/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 7 |
| Name (திரு/திருமதி) | : முத்துவேல் |
| Father's Name/ Husband's Name | : பாலகிருஷ்ணன் |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : உதவி மருத்துவர் |
| Age | : 42 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.09.2025**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேல்சித்தாமுர் அரசு மேம்படுத்தப்பட்ட அரசு சுகாதார மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.11.2015 தேதியன்று நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது இரவு 07.30 மணியளவில் திரு. பழனி த.பெ. பச்சையப்பன் என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில் தெரிந்த 10 நபர்கள் அன்று இரவு 7.00 மணியளவில் தடி, கற்கள் மற்றும் கத்தியை கொண்டு அவரது வீட்டருகில் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. தலையில் 3x1 c.m அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்ப காயம் என காயச்சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** அன்றைய தினமே இரவு 07.30 மணியளவில் திரு. விஜயகுமார் த/பெ. பழனி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில் தெரிந்த 10

நபர்கள் அன்று இரவு 7.00 மணியளவில் தடி, கற்கள் மற்றும் கத்தியை கொண்டு அவர வீட்டின் அருகே தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. இடது கை முட்டியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்ப காயம் என காயச்சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. அன்றைய தினமே இரவு 07.40 மணியளவில் திருமதி. அமராவதி க/பெ. நாராயணசாமி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில் தெரிந்த 10 நபர்கள் கை, கத்தி, கற்கள் மற்றும் தடி கொண்டு தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. வயிற்று வலி இருப்பதாக கூறினார். 2 தலைவலி இருப்பதாக கூறினார். 3. உடல் வலி இருப்பதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்ப காயம் என காயச்சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4 . அன்றைய தினமே இரவு 07.40 மணியளவில் திருமதி. ஆண்டாள் க/பெ. பழனி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரணை செய்ததில் தெரிந்த 10 நபர்கள் அன்றிரவு 7.00 மணியளவில் அவரது வீட்டின் அருகே வைத்து கத்தி, கற்கள் மற்றும் தடி கொண்டு தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. இரண்டு கால் முட்டிகளிலும் வலி இருப்பதாக கூறினார். 2 நெஞ்சி வலி இருப்பதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்ப காயம் என காயச்சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய**

**காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. காயமடைந்த 4 நபர்களும் என்னிடம் அவர்களை 10 நபர்கள் தாக்கியதாக கூறினார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் என்னுடைய விசாரணையின்போது அவர்களை வீட்டிற்கு வெளியே வைத்து தாக்கினார்களா? அல்லது வீட்டிற்குள்ளே வைத்து தாக்கினார்களா? என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி 4 நபர்களும் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தனர். பழனி என்பவருக்கு தலையில் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்பதை நான் காயச்சான்றில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.மேற்படி காயமானது புதிய காயமா அல்லது பழைய காயமா என்பது குறித்து நான் காயச்சான்றில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. காயமடைந்த நபர்களுக்கு இரவு 7.00 மணிக்கு முன்பு காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். பழனி என்பவர் அவரது வீட்டின் வாசப்படியில் இடித்துக்கொண்டால் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. விஜயகுமார் வேகமாக சென்று அவராக கீழே விழுந்திருக்கும் பட்சத்தில் அவருககு காயச்சான்றில் குறிப்பிட்டுள்ள சிராய்ப்பு காயம் ஏற்பட வாப்புகள் உள்ளது என்றால் சரிதான். அமராவதி மற்றும் ஆண்டால் ஆகியோர்களுக்கு வெளிக்காயங்கள் இல்லை என்றால் சரிதான். அவர்கள் வலி இருப்பதாக பொய் உறைத்திருக்கவும் வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான்.

3. இந்த வழக்கு சம்பந்தமாக காவலர்கள் என்னை விசாரித்தபோது கணினி மூலம் எனது வாக்குமூலத்தை தட்டச்சு செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.